

கடலூர் கிழக்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணியின் துணை ஒருங்கிணைப்பாளர் கோ.பா.கௌதமனின் தந்தையும், மேட்டுக்குப்பம் கிளை கழக செயலாளரும் என்.எல்.சி., தொமுச சுரங்கம் 1 முன்னாள் செயற்குழு உறுப்பினருமான கோவி.பாலமுருகன் அவர்கள் 19.08.2025 அன்று இயற்கை எய்தினார். அன்னாரது உடலுக்கு, வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் இறுதி அஞ்சலி செலுத்தினார். மாவட்டக் கழகப் பொருளாளர் எம்.ஆர்.கே.பி.கதிரவன், குறிஞ்சிப்பாடி ஒன்றிய கழகச் செயலாளர் வி.சிவக்குமார், வடலூர் நகர மன்றத் தலைவர் சு.சிவக்குமார், வடலூர் நகர கழகச் செயலாளர் த.தமிழ்ச்செல்வன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் அன்னாரது உடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினர்.

### பெருநிறுவன விவகாரம் : பயனர்களின் குறைகளுக்கு

# 17 மொழிகளில் கட்டணமில்லா தொலைபேசி மூலம் தீர்வு காணலாம்!

## மக்களவையில் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி! ஒன்றிய அமைச்சர் பதில்!

புதுடெல்லி, ஆக. 21 -

ஒன்றிய அரசின் பெருநிறுவன விவகார அமைச்சகம் தொடர்பாக பயனர்களிடமிருந்து ஏற்படும் குறைபாடுகள் மற்றும் புகார்களைத் தவிர்க்க MCA இணைய தளம் சமீபத்திய பதிப்பு 3ஐ ஒன்றிய அரசு அறிமுகப்படுத்தியுள்ளதா? ஆம் எனில் அதன் பயன்பாடு அதற்கான செலவு குறித்து மக்களவையில் வேலூர் தொகுதி உறுப்பினர் கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

அவரது கேள்விகள் வருமாறு:

ஒன்றிய அரசின் பெருநிறுவன விவகார அமைச்சகம் தொடர்பாக கடந்த இரண்டு ஆண்டுகளில் அதன் பயனர்களிடமிருந்து ஏற்படும் குறைபாடுகள் மற்றும் புகார்களைத் தவிர்க்க 38 புதிய மின்படிவங்களுடன் MCA இணைய தளம் சமீபத்திய பதிப்பு 3 ஐ ஒன்றிய அரசு அறிமுகப்படுத்தியுள்ளதா? அப்படியானால், அதன் விவரங்கள் என்ன ?

MCA இணையதளத்தில் பதிப்பு 3 ஐ அறிமுகப்படுத்துவதற்காக ஒன்றிய அரசால் செய்யப்பட்ட மொத்த செலவு எவ்வளவு?

பட்டயக் கணக்காளர்கள் மற்றும் நிறுவனச் செயலாளர்கள் MCA இணைய தளத்தின் சமீபத்திய பதிப்பு 3 வாயிலாக ஒரு கோடிக்கும் மேற்பட்ட மின்படிவங்களை தாக்கல் செய்ய முடியுமா? அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?



eDaakhil போர்டல், தேசிய நுகர்வோர் உதவி எண் (NCH) மற்றும் Voxya தளம் ஆகியவை நுகர்வோர் தொடர்பான புகார்களைப் பதிவு செய்வதற்காக உருவாக்கப்பட்டதா? அப்படியானால், அதன் விவரங்கள் என்ன? என்று அவர் கேள்வி கேட்டிருந்தார்.

அதற்கு ஒன்றிய அரசின் பெருநிறுவன விவகார அமைச்சகம்; சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகத்தின் ராஜாங்க அமைச்சர் ஹர்ஷ் மல்ஹோத்ரா எழுத்து பூர்வமாக அளித்த பதில் வருமாறு:

ஆம். ஒன்றிய அரசின் பெருநிறுவன விவகார அமைச்சகம் ஜுலை 14, 2025 முதல் அமலுக்கு வரும் வகையில் 38 மின் படிவங்களை MCA21 பதிப்பு 2லிருந்து பதிப்பு 3க்கு மாற்றியுள்ளது. இவற்றில் 13 வருடாந்திர தாக்கல் படிவங்கள், 6 தணிக்கை /செலவு தணிக்கை படிவங்கள் மற்றும் பல இணக்கம் மற்றும் அறிக்கையிடல் படிவங்கள் அடங்கும். இந்த மாற்றம் இணக்க செயல்திறனை மேம்படுத்துதல், தரவு அறிக்கையிடலை தரப்படுத்துதல் மற்றும் இணைய அடிப்படையிலான தாக்கல், மேம்படுத்தப்பட்ட சரிபார்ப்புகள், முன் நிரப்பப்பட்ட படிவங்கள் மற்றும் வலுவான அங்கீகார வழிமுறைகள் போன்ற அம்சங்கள் மூலம் டிஜிட்டல் மயமாக்கப்பட்ட நிறுவன நிர்வாகத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்த மின்படிவங்களைத் தொடங்குவதற்காக ஏற்படும் செலவு MCA21 V3 திட்டத்திற்கான ஒட்டுமொத்த பட்ஜெட் ஒதுக்கீட்டின் கீழ் வருகிறது. இது வரை செய்யப்பட்ட திட்டத்தின் கீழ் மொத்த செலவு ரூ. 243.39 கோடி ஆகும்.

மார்ச் 8, 2022 அன்று MCA21 V3 இல் முதல் படிவங்கள் அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து, பட்டய கணக்காளர்கள், நிறுவன செயலாளர்கள் உள்ளிட்ட பல்வேறு பங்குதாரர்களால் 1.30 கோடிக்கும் மேற்பட்ட eForms தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

நுகர்வோர் தகராறுகளை விரைவாகவும் தொந்தரவில்லாமல் தீர்க்கவும், மின்னணு புகார் தாக்கல் செய்வதற்காக eDaakhil போர்டல் தொடங்கப்பட்டது. இது இப்போது eJagriti போர்ட்டலில் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. மைக்ரோசர்வீஸ் கட்டமைப்பு, செயற்கை நுண்ணறிவு / இயந்திர கற்றல் ஒருங்கிணைப்பு மற்றும் முகமற்ற ஆன்போர்டிங் மற்றும் பங்கு அடிப்படையிலான டாஷ்போர்டுகள் போன்ற சமீபத்திய அம்சங்கள் மூலம் நுகர்வோர் குறை தீர்க்கும் முறையை மேம்படுத்த eJagriti போர்டல் உருவாக்கப்பட்டுள்ளது

நாடு முழுவதிலுமிருந்து வரும் நுகர்வோர் தங்கள் குறைகளை இந்தி, ஆங்கிலம், காஷ்மீரி, பஞ்சாபி, நேபாளி, குஜராத்தி, மராத்தி, கன்னடம், தெலுங்கு, தமிழ், மலையாளம், மைதிலி, சந்தாலி, பெங்காலி, ஒடியா, அசாமி மற்றும் மணிப்பூரி உள்ளிட்ட 17 மொழிகளில் 1915 என்ற கட்டணமில்லா எண் மூலம் பதிவு செய்யலாம். இந்தக் குறைகளை ஒருங்கிணைந்த குறை தீர்க்கும் வழிமுறை (INGRAM), ஒரு சர்வசேனல் ஐடிஇயக்கப்பட்ட மத்திய போர்ட்டலில், பல்வேறு சேனல்கள் மூலம் WhatsApp (8800001915), SMS (8800001915), மின்னஞ்சல் (nchca@gov.in), NCH செயலி, வலை போர்டல் (consumerhelpline.gov.in) மற்றும் Umang செயலி மூலம் தங்கள் வசதிக்கேற்ப பதிவு செய்யலாம்.

'கன்வர்ஜென்ஸ்' திட்டத்தின் ஒரு பகுதியாக, NCH உடன் தன்னார்வமாக கூட்டு சேர்ந்த 1110 நிறுவனங்கள், இந்த குறைகளுக்கு அவற்றின் தீர்வு செயல்முறைக்கு ஏற்ப நேரடியாக பதிலளித்து, போர்ட்டலில் புகார்தாரருக்கு ஒரு கருத்தை வழங்குவதன் மூலம் திரும்பப் பெறுகின்றன.

இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் கூறியுள்ளார்.

### தமிழ்நாட்டில் மாவட்ட வாரியாக

# நாடு முழுவதும் செயல்படும் பொது சேவை மையங்களின் எண்ணிக்கை எவ்வளவு?

## மக்களவையில் தே.மலையரசன் கேள்வி!

புதுடெல்லி, ஆக. 21 -

மக்களவையில் கள்ளக்குறிச்சி தொகுதி உறுப்பினர் தே.மலையரசன் எழுப்பிய கேள்விகள் வருமாறு:

தமிழ்நாடு மாநிலத்தில், குறிப்பாக மாவட்ட வாரியாக, நாடு முழுவதும் செயல்படும் பொது சேவை மையங்களின் (CSC) எண்ணிக்கை?

கிராமப்புற மற்றும் நகர்ப்புறப் பகுதிகளில் CSCகள் மூலம் தற்போது வழங்கப்படும் அரசு மற்றும் தனியார் சேவைகளின்



வரம்பு என்ன?

தமிழ்நாட்டில் CSCகள் வழங்கும் அணுகல் சேவை தரம் மற்றும் டிஜிட்டல் கல்வியறிவு ஆதரவு குறித்து ஒன்றிய அரசு ஏதேனும் மதிப்பீட்டை நடத்தியுள்ளதா

CSC உள்கட்டமைப்பை வலுப்படுத்த அரசாங்கம் எடுத்து வரும் நடவடிக்கைகள், குடிமக்களின் விழிப்புணர்வை மேம்படுத்துதல் மற்றும் CSCகளை நடத்தும் கிராம அளவிலான தொழில் முனைவோரின் (VLEs) நிதி நம்பகத்தன்மையை உறுதி செய்தலுக்கான நடவடிக்கைகள் என்ன?

தமிழ்நாடு தொலைதூர மற்றும் பழங்குடிப் பகுதிகளில் உள்ள CSCகள் முழுமையாக செயல்படுவதையும் டிஜிட்டல் முறையில் பொருத்தப்பட்டிருப்பதையும் உறுதி செய்வதற்கு அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட குறிப்பிட்ட நடவடிக்கைகளின் விவரங்கள் என்ன? என மக்களவையில் கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன் கேள்வி எழுப்பினார்.



கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை அருகே கீழக்குப்பம் வேலூர் கிராமத்தில் கடந்த மாதம் துக்க நிகழ்ச்சியின் போது ஏற்பட்ட வெடி விபத்து சம்பவத்தில் மூன்று பேர் உயிரிழந்தனர், அவர்களின் குடும்பத்திற்கு தமிழக முதல்வர் தலா ரூ.3 லட்சம் நிவாரண உதவி அறிவித்தார், இந்த தொகை ஏற்கனவே அவர்களுக்கு வழங்கப்பட்ட நிலையில், இந்த வெடி விபத்து சம்பவத்தில் படுகாயம் அடைந்த கூத்தான், அருணாசலம், திவாகரன், சத்தியமூர்த்தி, ராகவன், விஜயகுமார், பிரதாப், ராமலிங்கம், மணிகண்டன் ஆகிய 9 பேருக்கு தலா ரூ.50,000 நிவாரண உதவியை நேற்று முன்தினம் (19.08.2025 செவ்வாய்க்கிழமை) உளுந்தூர்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் வடக்கு மாவட்ட கழக அவைத் தலைவர், ஆ.ஜெ.மணிக்கண்ணன் நேரில் வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் வட்டாட்சியர் ஆனந்த கிருஷ்ணன், ஒன்றிய செயலாளர் கே.வி.முருகன் , ஊராட்சி மன்ற தலைவர் அஞ்சாமணி மனோகர், ஒன்றிய கவுன்சிலர் ஆனந்தாயி மணிகண்டன், முன்னாள் தலைவர் சந்திரசேகரன் நிர்வாகிகள் அன்பரசன், அய்யனார், மணிகண்டன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.





விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் கலைஞர் கனவு இல்லம் திட்டம் மற்றும் முதலமைச்சரின் வீடுகள் மறு கட்டுமான திட்டத்தின் கீழ் 55 நபர்களுக்கு 1.44 கோடிரூபாய் மதிப்பீட்டில் வீடுகள் கட்டுவதற்கும், வீடுகள் புனரமைப்பதற்கான உத்தரவினையும், சமையல் உதவியாளர்கள் நிலையிலிருந்து சமையலராக பதவி உயர்வு பெற்றவர்களுக்கு பணி ஆணைகளை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பயனாளிகளுக்கு வழங்கினார். உடன் ஒன்றிய பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன், ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன், நாராயணமூர்த்தி, சாந்தி சுப்பிரமணியன், துணை சேர்மன் விஜயலட்சுமி முருகன், மாவட்ட கவுன்சிலர் செல்வி ராமசரவணன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஜெயசங்கர், சீத்தாலட்சுமி, ஆகியோர் உள்ளனர்.

### கண்மணி நெடுஞ்செழியன் தலைமை!

# மேல் மலையனூரில் கலைஞர் கனவு இல்லத் திட்டம்!

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

செஞ்சி, ஆக. 21 -

மேல்மலையனூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் கலைஞர் கனவு இல்லம் திட்டம் மற்றும் முதலமைச்சரின் வீடுகள் மறு கட்டுமான திட்டத்தின் கீழ் 55 நபர்களுக்கு 1.44 கோடிரூபாய் மதிப்பீட்டில் வீடுகள் கட்டுவதற்கும், வீடுகள் புனரமைப்பதற்கான உத்தர வினையும், சமையல் உதவியாளர்கள் நிலையிலிருந்து சமையலராக பதவி உயர்வு பெற்றவர்களுக்கு பணி ஆணைகளை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பயனாளிகளுக்கு வழங்கினார். ஒன்றியப் பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன் தலைமை தாங்கினார்.

விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் முதலமைச்சரின் வீடுகள் மறு கட்டுமானத் திட்டத்தில் வீடுகள் புனரமைப்பதற்கும், கலைஞர் கனவு இல்லம் திட்டத்தில் வீடுகள் கட்டுவதற்கான உத்தரவுகள் மற்றும் மேல்மலையனூர் ஒன்றியத்தில் உள்ள அரசுப் பள்ளிகளில் சமையல் உதவியாளர்நிலையிலிருந்து சமையலராக பதவி உயர்வு பெற்றவர்களுக்கு பணி ஆணைகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

மேல்மலையனூர் ஒன்றியப் பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன் தலைமை தாங்கினார்.

வட்டார கல்விக் குழுத் தலைவர் நெடுஞ்செழியன் முன்னிலை வகித்தார் .வட்டார வளர்ச்சி அலுவலர் ஜெயசங்கர் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ.கலந்து கொண்டு மேல்மலையனூர் ஒன்றியத்தில் உள்ள அரசுப் பள்ளிகளில் சமையல் உதவியாளர்கள் நிலையிலிருந்து சமையலர்கள்பதவி உயர்வு பெற்றதற்கான பணி ஆணைகளை வழங்கினார். தொடர்ந்து முதலமைச்சரின் வீடுகள் மறுக் கட்டுமான திட்டத்தின் கீழ் 44 நபர்களுக்கு 1 கோடியே 5 லட்சத்தி 60 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலும்,

கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ்11 நபர்களுக்கு 38 லட்சத்தி 50 ஆயிரம் ரூபாய் என மொத்தம் 1 கோடியே 44 லட்சத்தி 10 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் வீடுகள் கட்டுவதற்கான உத்தரவினை அவர் வழங்கி சிறப்புரை யாற்றினார்.

நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர்கள் சாந்தி சுப்பிரமணியன், நாராயணமூர்த்தி, துணை சேர்மன் விஜயலட்சுமி முருகன், மாவட்ட கவுன்சிலர் செல்வி ராமசரவணன், வட்டார வளர்ச்சி அலுவலர் சீதாலட்சுமி,ஒன்றிய கவுன்சிலர்கள் ரவிச்சந்திரன், ராஜா, சிவசக்தி, ஊராட்சி மன்றத் தலைவர்கள், துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள், மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள், தி.மு.க. நிர்வாகிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். துணை வட்டார வளர்ச்சி அலுவலர் கலா அனைவருக்கும் நன்றி கூறினார்.

### குளச்சல் மீன்பிடித் துறைமுகத்தின்

# விரிவாக்கத்திற்கு ரூ.350 கோடி நிதி ஒதுக்கிய முதல்வருக்கு நன்றி!

## கழக மீனவர் அணிச் செயலாளர் அ.ஜோசப் ஸ்டாலின் அறிக்கை!

கன்னியாகுமரி, ஆக. 21 -

கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட குளச்சலில் அமைந்துள்ள புராதான இயற்கை துறைமுகம், தமிழ் நாட்டின் சிற்பியாம் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் தொலை நோக்குத் திட்டத்தினால் 2008 ஆம் ஆண்டு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு துவங்கிய திட்டம் அப்பகுதி மக்களின் வாழ்வாதாரத்திற்கு பெரிதும் உதவியது.

தற்போது, குளச்சல் நகரம் மற்றும் அதன் சுற்று வட்டார கிராமங்களிலுள்ள சுமார் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மீனவ குடும்பங்களின் வாழ்வாதாரத்திற்கு நேரடியாகவும், பல இலட்சம் மக்கள் மறைமுகமாகவும் பயன்படுகின்ற வகையில் குளச்சல் மீன்பிடித் துறை முகத்தின் விரிவாக்கத்திற்கு ரூ.350 கோடி நிதியையும் வழங்க வழி வகுத்திருக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு கன்னியாகுமரி மாவட்ட அனைத்து மீனவ மக்களின் சார்பாக கோடான கோடி நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி மீனவ மக்களின் கோரிக்கையை ஒன்றிய அரசின் கவனத்திற்கு கொண்டு சென்று மீனவ மக்களுக்கு உறுதுணையாக இருந்த நிதி மற்றும் சுற்றுச்சூழல் பருவநிலை மாற்றத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்களுக்கும், நாடாளுமன்ற குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்களுக்கும் மற்றும் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் அவர்களுக்கும் கோடான கோடி நன்றிகளை கழக மீனவர் அணி சார்பாகவும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு கழக மாநில மீனவர் அணிச் செயலாளர் டாக்டர் அ.ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.





கள்ளக்குறிச்சி மாவட்டம், சங்கராபுரம் ஒன்றியத்தில் நேற்று முன்தினம் 19.08.2025 செவ்வாய்க்கிழமை அன்று வடசெட்டியந்தல் மயிலாம்பாறை என்.எஸ்.கே. மஹாலில் நடைபெற்ற 'உங்களுடன் ஸ்டாலின்' சிறப்பு முகாமில், வடக்கு மாவட்டக் கழக செயலாளரும், சங்கராபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான தா.உதயசூரியன் கலந்துகொண்டு தலைமை தாங்கி முகாமை தொடங்கி வைத்து, பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களாக பெற்று, மனுதாரர்களுடன் கலந்துரையாடி விவரங்களை கேட்டறிந்து, பெறப்பட்ட மனுக்கள் மீது 45 நாட்களுக்குள் தீர்வு காணப்படும் என்று உறுதி அளித்து, மனுக்கள் பதிவு செய்யப்படுவதை ஆய்வு செய்து, உடனடியாக தீர்வு காணப்பட்ட மனுக்களின் அடிப்படையில் பயனாளிகளுக்கு சான்றிதழ்கள் மற்றும் நலத்திட்ட உதவிகளையும் வழங்கி, திராவிட மாடல் அரசின் பல்வேறு சாதனை திட்டங்களையும் மக்களிடத்தில் எடுத்துரைத்தார், இம்முகாமில், திலகவதி நாகராஜன், ந.பன்னீர்செல்வம், ஆறு.கதிரவன், இரா. செல்வம், என்.துரைதாகப்பிள்ளை, மா.தனவேல் மற்றும் துறை சார்ந்த அரசு உயர் அதிகாரிகள், அலுவலர்கள், தன்னார்வலர்கள், கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள், மனுதாரர்கள், பயனாளிகள் என ஏராளமானோர் கலந்துகொண்டனர்.